முச்சந்தி முரளி



"எலக்சன் மழை
முடிஞ்ச கையோட
இந்த மாரிமழையும்
இப்பிடிக்
கொட்டுதே"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 361

வெள்ளிக்கிழமை
22 நவம்பர் 2024

கார்த்திகை 07
வள்ளுவர் ஆண்டு 2055

# வடமாகாணத்தில் வெள்ளப் பேரிடர்

## நிலைமை மேலும் மோசமாகும்
## கடற்கொந்தளிப்பு அதிகரிக்கும்
## காற்றின் வேகத்தாலும் கவனம்
## மீனவர்கள் மிகுந்த அவதானம்



படம்: - ஐ.சிவசாந்தன்

**யாழ்ப்பாணம், நவம்பர் 22**

**வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் கடந்த 24 மணிநேரத்துக்கும் மேலாகப் பெய்துவரும் தொடர்ச்சியான மழை காரணமாக, பல இடங்களில் வெள்ளப் பேரிடர் நிலை ஏற்பட்டுள்ளது. இன்றும், மழை தொடரும் என்பதால் நிலைமை மேலும் மோசமாகும் என்றும் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் துறைசார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.** 11

## பெண்ணிடம் பாலியல் லஞ்சம் பலாலிப் பொலிஸார் கைது!

யாழ்ப்பாணம், நவ. 22
பெண்ணொருவரிடம் பாலியல் லஞ்சமும், 12 லட்சம் ரூபா பணமும் கோரிய பலாலி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அந்தப் பெண் தனது காதலனுடன் இருக்கும் ஒளிப்படத்தை வைத்து, பெண்ணின் வீட்டைக் கண்டுபிடித்த பொலிஸார், 11

கடும் மழையால்

## யாழ். மாவட்டத்தில் 2,294 பேர் பாதிப்பு!

### 20 வீடுகளுக்குச் சேதம்

யாழ்ப்பாணம், நவ. 22
யாழ். மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக 610 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 294 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 20 வீடுகள் 11

## தமிழரசின் பேச்சாளர் ஶ்ரீநேசன்

கொழும்பு, நவ. 22
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப்பேச்சாளராக, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஶ்ரீநேசன் நியமிக்கப்பட்டுள்ளார். 11

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக

## மோசடியில் ஈடுபட்ட பெண்ணுக்கு 35 ஆண்டுகள் சிறைத்தண்டனை!

யாழ்ப்பாணம், நவ. 22
வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கோடிக் கணக்கான பணத்தை மோசடி செய்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்காக பெண்ணொருவருக்கு 35 ஆண்டுகள் சிறைத் 11

## சபாநாயகரானார் அசோக ரன்வல

### பிரதி சபாநாயகர் மொகமட் ரிஸ்வி சாலி

கொழும்பு, நவ. 22
பத்தாவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகர் பதவிக்கு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி அசோக ரன்வல ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.
பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவால் அசோக ரன்வலவின் பெயர் முன்மொழியப்பட்டது. அமைச்சர் விஜித ஹேரத் அதனை வழிமொழிந்தார். 11

## டக்ளஸுக்கு எதிராக பிடியாணை உத்தரவு

கொழும்பு, நவ. 22
வழக்கு ஒன்றில் சாட்சியமளிக்க முன்னிலையாகாத காரணத்தால், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கைதுசெய்யுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்றுப் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.
தலா 10 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு காசோலைகளை வழங்கிய சம்பவம் 11

## டிசெம்பர் 3ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்!

கொழும்பு, நவ. 22
10ஆவது நாடாளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தொடர் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 11

## 29 பிரதி அமைச்சர்கள் நேற்றுப் பதவியேற்றனர்

கொழும்பு, நவ. 22
29 பிரதி அமைச்சர்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்றுப் பதவியேற்றனர்.
பிரதி அமைச்சர்கள் விவரம் வருமாறு. 09

## நாணய நிதிய ஒப்பந்தம் ஒரு மாதத்தில் முழுமை

### பணியாளர் மட்ட இணக்கப்பாடு சனிக்கிழமை கைச்சாத்தாகிறது

கொழும்பு, நவ. 22
சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்றிட்டம் இந்த ஆண்டுக்குள் முழுமையாகும் என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். பணியாளர் மட்ட இணக்கப்பாடு 11

## பெப்ரவரியில் பட்ஜெட் வரும்

- அஸ்வெசும அதிகரிக்கும்
- கல்விக்கு கொடுப்பனவு
- ஊதியம் அதிகரிக்கப்படும்

கொழும்பு, நவ. 22
அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வரவு - செலவுத்திட்டம் முன்வைக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர அரசாங்கம் 'மாஸ்டர் பிளான்'!

**கொழும்பு, நவ.22**
**ஜே.வி.பி.யின் முக்கியஸ்தர்கள் சிலருக்கு அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படாமையின் பின்னணியில் திட்டமொன்று உள்ளதாக புதியதொரு தகவல் வெளியாகியுள்ளது.**

மாகாணசபைத்தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளர்களாகக் களமிறக்கப்படவுள்ளதாலேயே அவர்கள் அமைச்சரவைக்குள் உள்வாங்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.
சிலருக்கு பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டாலும், தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னர் அவர்கள் பதவி விலகவுள்ளனர் என அறியமுடிகின்றது.
ஜே.வி.பி.யின் மூத்த உறுப்பினரான நிஹால் கலப்பத்தி அமைச்சரவைக்கு உள்வாங்கப்படவில்லை.
அவருக்கு சபாநாயகர் பதவியும் வழங்கவில்லை. தென்மாகாண முதலமைச்சராக்குவதற்கே அவருக்குத் தற்போதைய அரசாங்கத்தில் பதவிகள் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது. நாமல் கருணாரத்ன உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்களும் மாகாண முதல்வர் வேட்பாளர்களாகக் களமிறக்கப்படவுள்ளனர் என்றும் அறியவருகின்றது. (ச-44)

# உறுதிமொழிகள் நிறைவேற்றப்படும்

*ரில்வின் சில்வா தெரிவிப்பு*

கொழும்பு, நவ. 22
வடக்கு, கிழக்கு மக்களுக்கென குறிப்பாக பல பிரச்சினைகள் உள்ளன. அவை தீர்க்கப்படும். புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும்.
-இவ்வாறு ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு மக்கள் புரட்சிகரமான மாற்றத்தைச் செய்துள்ளனர். அதற்கு நிச்சயம் தலைவணங்கியாகவேண்டும். தமிழ் மக்களுக்கென பிரத்தியேகமான பிரச்சினைகள் உள்ளன. அவை தீர்க்கப்படும்.
வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றேன்.
முழு நாடும் ஒரு கட்சியின்கீழ் திரண்டுள்ளது. நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. ஒரு நாட்டில் வாழ்வதற்கு மக்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர். வடக்கு, கிழக்கு மக்களுக்கென குறிப்பாக பல பிரச்சினைகள் உள்ளன. அவை தீர்க்கப்படும். புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் - என்றார். (ச-44)



# காணிப் பிரச்சினைகள் விரைந்து தீர்ப்போம்

*தே.ம.சக்தி எம்.பி. சதுரங்க தெரிவிப்பு*

கொழும்பு, நவ. 22
வடக்கு மக்களின் காணிப்பிரச்சினை என்பது நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள பிரச்சினை என்பதுடன், விரைவாகத் தீர்க்கவேண்டிய பிரச்சினையுமாகும். நாம் அதனை வேகமாகச் செய்வோம்.
- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சதுரங்க அபேசிங்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் நாட்டுக்கு மிகப்பெரிய சுமையாகும். அதனால் அவர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் அதி முக்கியத்துவம் அளிக்கும். குறிப்பாக இன்னமும் விடுவிக்கப்படாத காணிகளை மிக விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அரசியல் கைதிகள் தொடர்பிலான பிரச்சினைக்கும் தீர்வு காணப்படும்.
மலையகத்தில் சம்பிரதாயபூர்வமான அரசியலை மக்கள் முழுமையாக நிராகரித்துள்ளனர்.
அவர்களது கல்வியை அபிவிருத்தி செய்து சிறந்த சமூக வாழ்வை ஏற்படுத்த வேண்டியுள்ளது- என்றார். (ச-இ)

# எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸ நீடிப்பு

கொழும்பு, நவ.22
10 ஆவது நாடாளுமன்றத்திலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ நீடிக்கவுள்ளார்.
எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸவை ஏற்பதாக சபாநாயகர் நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.
சபை முதல்வராக அமைச்சர் பிமல் ரத்நாயக்கவும், ஆளுங்கட்சி பிரதம கொறடாவாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவும் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் சபாநாயகர் தெரிவித்தார்.
கடந்த நாடாளுமன்றத்திலும் எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸவே செயற்பட்டார். (ச-44)




# முன்னாள் அமைச்சர்கள் சி.ஐ.டி.யில் முன்னிலை

கொழும்பு, நவ.22
முன்னாள் அமைச்சர்கள் பலர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று அழைக்கப்பட்டுள்ளனர்.
தரமற்ற நோய் எதிர்ப்பு மருந்துகளைக் கொள்வனவுசெய்வது தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவால் தாக்கல்செய்யப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் அங்கீகாரம் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காகவே அவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.
அதன்படி முன்னாள் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, ரமேஷ் பத்திரன, ரொஷான் ரணசிங்க மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# தேசியப்பட்டியல் விவரம் ஐ.ம.சக்தி இழுத்தடிப்பு

*ஆணைக்குழு தெரிவிப்பு*

கொழும்பு, நவ.22
நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படவுள்ள தேசியப்பட்டியல் உறுப்பினர்களின் பெயர்களை சில கட்சிகள் இதுவரையில் வழங்கவில்லை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
கட்சிகளின் செயலாளர்களால் அனுப்பப்பட்டுள்ள பெயர்கள் மாத்திரம் இதுவரையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.
அதன்படி, தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, சர்வஜன அதிகாரம் கட்சி, இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியன தங்களது கட்சிக்கான தேசியப் பட்டியல் உறுப்பினர்களை அறிவித்துள்ளன.
அதேநேரம், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 5 தேசியப்பட்டியல் ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது.
அவற்றில் கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயரை மாத்திரம் அறிவித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது. ஏனைய 4 உறுப்பினர்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




# ஷெல் மீட்பு

வவுனியா, நவ.22
வவுனியா வடக்கு அனந்தர் புளியங்குளம் பகுதியில் மோட்டார் ஷெல் ஒன்று மீட்கப்பட்டது.
குறித்த பகுதியில் அமைந்துள்ள தனியார் காணியில் இருந்தே குறித்த ஷெல் நேற்று மீட்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அதனை செயலிழக்கச்செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிஜிற்றல் திரையால்

# 30 வீத சிறுவர்களின் கிட்டப்பார்வை பாதிப்பு

கொழும்பு, நவ. 22

**டிஜிற்றல் திரைகளை நீண்டகாலமாகப் பயன்படுத்துவதால் 30 சதவீத சிறுவர்கள் கிட்டப்பார்வை பிரச்சினையை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது, 2050 ஆம் ஆண்டில் 50 சதவீதமாக உயரும் என உலக சுகாதார நிறுவனம் கணித்துள்ளதாக கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் கண் மருத்துவர் அனுசா தென்னேகும்புர தெரிவித்துள்ளார்.

எனவே குழந்தைகளின் கண் ஆரோக்கியத்தை கண்காணிப்பதன் முக்கியத்துவம் மற்றும் நீண்டகால சிக்கல்களைத் தடுக்க சரியான நேரத்தில் சிகிச்சை பெறுவது முக்கியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.


அதேவேளை திரைகளில் தங்கியிருப்பதை விட, தரமான நேரத்தை தங்கள் குழந்தைகளுடன் விளையாட்டுகளில் செலவிடுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)

# வலைத்தளத்தில் அவதூறு வவுனியாவில் பெண் கைது!

வவுனியா,நவ.22

சமூக வலைத்தளத்தில் நபர் ஒருவருக்கு எதிராக அவதூறு பரப்பிய குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

குறித்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. வெளிநாடொன்றில் வசிக்கும் குறித்த பெண் அண்மையில் நாட்டுக்கு வந்திருந்த நிலையில் வவுனியாவைச் சேர்ந்த நபர் ஒருவருடன் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து சமூக வலைத்தளத்தில் அவர் மீது அவதூறு பரப்பி காணொலிகளை பதிவிட்டுள்ளார். பாதிக்கப்பட்டவர் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய குறித்த பெண் கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் புதன்கிழமை வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ச-33-18- 110)



# பலநாள் திருடன் யாழில் சிக்கினான்

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக முகக்கவசம் அணிந்து திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை சி.சி.ரி.வி.கமரா மூலம் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

கோப்பாய், யாழ்ப்பாணம் பகுதிகளில் இரவு வேளையில் தொடர்ச்சியாக திருட்டில் ஈடுபட்டுவந்தவரே இவ்வாறு சி.சி.ரி.வி. கமராவில் சிக்கியுள்ளார்.

குறித்த நபர் இரவு ஒரு மணி தொடக்கம் 3 மணி இடைவெளியில் முகக்கவசம் அணிந்து சைக்கிளில் நடமாடுவதாகவும் இதுவரையான காலப் பகுதியில் 8 வீடுகளில் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் எனவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த திருடன் வங்கி, நிதிநிறுவனங்கள், நிறுவனங்களில் பணிபுரிவோர் மற்றும் மருத்துவர்களின் வீடுகளை இலக்கு வைத்தே திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளமை பதிவாகியுள்ளது. எனவே பொதுமக்கள் இது குறித்து அவதானமாக இருக்குமாறும் சம்பவம் தொடர்பில் சந்தேகநபரை கைது செய்ய உதவுமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-125)

# ரணிலுக்கு எதிராக உரிமைமீறல் மனு



கொழும்பு, நவ, 22

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மதுவரித்திணைக்கள ஆணையாளர், இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுத் தலைவர், நிதியமைச்சின் செயலர் ஆகியோருக்கு எதிராக உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைமீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் வாக்குகளைக் கவரும் நோக்குடன் மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர். கண்டியைச் சேர்ந்த இரு மதுபானசாலை உரிமையாளர்களே இந்த அடிப்படை உரிமைமீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். (ச-25, 6)

# மீன்பிடி வான்கள் அமைப்பு யாழில் கலந்துரையாடல்!



யாழ்ப்பாணம், நவ.22

யாழ்.மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள மீன்பிடி வான் புனரமைத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலக அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக செயலர் க. ஸ்ரீமோகனன், தெல்லிப்பழை பிரதேச செயலாளர், கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர், கரையோர பாதுகாப்புத் திணைக்களப் பொறியியலாளர், மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்,தெல்லிப்பழை மற்றும் சங்கானை பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், [illegible] நிறுவன பிரதிநிதிகள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ச-25,27)



# தினம் தெரியுமோ?

கண்டறியாதவன் கலியாணம் கட்டினால் பெண்டிலைக் காடு மேடெல்லாம் கொண்டு திரிஞ்ச கதையாப் போட்டுது உந்த 'ஊசிக்கார வில்லுத்தகட்டின்ர' விளையாட்டுகள். கர்ணன்ர கவச குண்டலம் மாதிரி வில்லுத்தகடு எங்க போனாலும் ஒரு ஸ்டெதஸ்கோப் போடையும், 'தங்கத்தோடையும்' தான் போவார். பார்லிமெண்டுக்கும் அப்பிடித்தான். நேற்றுத்தான் பார்லிமெண்ட் தொடங்கினது. ஆனால் வில்லுத்தகடார் முதல் நாளே தங்கத்தோட காரில போய், ஒத்திகை பாத்து அதையும் பேஸ்புக்கில லைவ் விட்டு படம் காட்டினவர்.

நேற்றும் ஆள் வேளைக்கே காரில தங்கத்தை ஏத்திக்கொண்டு அங்க பார்க்கிங் இருக்கு, இஞ்ச ரொய்லெட் இருக்கு எண்டு எல்லாத்தையும் லைவில சொல்லிக்கொண்டே போனவரை, பொலிஸ்காரர் மறிச்சு 'நீங்க மட்டும் தான் (பார்லிமெண்ட் மெம்பர் மட்டும்) இஞ்ச காரை விடலாம். மற்றவை பார்வையாளர் பக்கத்தால தான் வரோணும்' எண்டு சொல்ல, வில்லுத்தகட்டுக்கு முகம் வாடிப்போட்டுது. 'தங்கத்தோட'கை கோர்த்தபடி பார்லிமெண்டுக்க வலதுகாலை எடுத்து வைப்பமெண்டு நினைக்க, பொலிஸ் இப்பிடிச் சொல்லிப்போட்டுதே எண்டு கவலை போல. பிறகு தங்கத்தை முன்னுக்கு இறக்கிப் போட்டு, இவர் மற்றப்பக்கத்தால உள்ளுக்க போட்டார். ஆனால் நல்லகாலம் பழக்க தோசத்தில பார்லிமெண்டுக்குள்ள ஆள் பேஸ்புக் லைவ் விடேலை. விட்டிருந்தால் முதல்நாளே ஆளை, படைக்கல சேவிதர்மார் அப்பிடியே தூக்கியந்து வெளியில எறிஞ்சிருப்பாங்கள்.

உள்ளுக்க போயும் வில்லுத்தகடு தன்ர விளையாட்டை விடேலை. பார்லிமெண்டில முதல் நாள் எல்லாரும் தங்களுக்குப் பிடிச்ச சீற்றுகளில இருக்கலாம். அதுக்குப் பிறகுதான் ஆருக்கு, எந்தச் சீற் எண்டு பார்லிமெண்டில இடம் ஒதுக்குவினம். ஆனால் ஜனாதிபதி,பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர் எண்ட மூண்டு பேருக்கும் எப்பவும் நிரந்தரமா சீற் இருக்கும். அதில முதல்நாளெண்டாலும் வேற ஆக்கள் இருக்கேலாது. ஆனால் வில்லுத்தகட்டுக்கு விசயம் தெரியாமல், எதிர்க்கட்சித் தலைவரின்ர சீற்றில போய் காலுக்குமேல கால் போட்டுக்கொண்டு இருந்திட்டுது. அப்பிடி அவர் இருந்ததைக் கண்டிட்டு, படைக்கல சேவிதர்மார் விழுந்தடிச்சுக்கொண்டு வந்து 'சேர், இதில எதிர்க்கட்சித் தலைவர்தான் இருக்கலாம்' எண்டு பவ்வியமாச் சொல்லியிருக்கினம். 'அப்பிடி இதில எழுதி இருக்கோ? முதல் நாள் ஆரும் எந்த சீற்றிலையும் இருக்கலாம் எண்டு தானே நேற்று எனக்குச் சொல்லி விட்டவை'எண்டு அவையோட வில்லுத்தகடார் பாயத்தொடங்கிட்டார். 'அப்பிடியில்லை சேர், எதிர்க்கட்சித் தலைவரின்ர சீற்றில வேற ஆக்கள் இருக்கேலாது. அதுதான் பார்லிமெண்ட் மரபு' எண்டு படைக்கல சேவிதர் விளங்கப்படுத்தியிருக்கிறார். அப்பவும் வில்லுத்தகட்டுக்குப் புத்தி வரேலை.'மரபோ? உந்தக் கோதாரி மரபையெல்லாம் உடைக்கத்தானே நான் பார்லிமெண்டுக்கு வந்திருக்கிறன்' எண்டு எழுப்பக்கதை கதைச்சிருக்கிறார்.

'நாங்கள் சொல்லியும் இருந்தால் , உங்களை நாங்களா தூக்கி எழுப்ப வேண்டி வரலாம்' எண்டு படைக்கல சேவிதர் சிரிச்சுக்கொண்டே வெருட்டினபிறகு தான், ஆள் எழும்பி இடம் மாறினவராம்.

ஆரம்பமே இப்பிடி அமர்க்களம் எண்டால், போகப் போக வில்லுத்தகடு என்னென்ன குறளிவித்தையெல்லாம் காட்டி, யாழ்ப்பாணத்தாரின்ர மானத்தைக் கப்பலில ஏத்தப்போகுதோ? என்னதான் இருந்தாலும் வில்லுத்தகடு இருக்கும் மட்டும் பார்லிமெண்டில பகிடிக்கு மட்டும் பஞ்சமிருக்காது.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குருதிக்கொடையும் மரநடுகை நிகழ்வும்

யாழ்ப்பாணம்,நவ.22
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 50ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் பணியாளர் பேராசிரியர் றொபின்சன் தலைமையில் கடந்த சனிக்கிழமை காலை 9 மணிக்கு இரத்ததானம் மற்றும் மரநடுகை நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் பேராசிரியர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-33)

## சாயிபாபா பிறந்த தினம்

யாழ்ப்பாணம், நவ,22
சத்திய சாயிபாபாவின் 99 ஆவது அவதார தின நிகழ்வுகள் யாழ்.சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. சிறப்புரைகளுடன் வயலின் இசை அர்ப்பணம், நாட்டியம், நாடகம், பஜனை போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதோடு மதியபோசனமும் வழங்கப்படவுள்ளதாக சத்திய சாயி சேவா நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (ச-25)

## குடமுழுக்கு

யாழ்ப்பாணம், நவ.22
வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான பரிவாரத் திருக்கோவில்களான வண். வடமேற்கு தட்டாதெரு காளி கோயில், பண்ணை முத்துமாரியம்மன் கோயில் ஆகியவற்றின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இடம்பெறவுள்ளது.
வண். வடமேற்கு தட்டாதெரு காளி கோயிலில் கும்பாபிஷேகக் கிரியைகள் எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை காலை 9.44 மணி தொடக்கம் 11.36 மணி வரை இடம்பெறும். தொடர்ந்து 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.39 மணி தொடக்கம் காலை 9 மணி வரை மஹாகும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.
பண்ணை முத்துமாரியம்மன் கோயிலில் கும்பாபிஷேகக் கிரியைகள் டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணி வரை இடம்பெறவுள்ளது. தொடர்ந்து டிசெம்பர் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.40 மணி தொடக்கம் 8.30 மணி வரை மஹாகும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ரி)

## உளசமூக மேம்பாடு நல்லூரில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம்,நவ.22
வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கான உளசமூக மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நல்லூர்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் நல்லூர்ப் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் வளவாளராகக் கலந்துகொண்டு உள ஆற்றுப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துரையை வழங்கினார். (ச-33-66)



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால்வீட்டில்பிரச்சினைஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை வழி உறவுகள் உதவி கேட்டு வருவார்கள்.

**இடபம்:** தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டாலும் பெரிய அளவில் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்க ளுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக் கவும். பிற்பகலுக்கு மேல் சிலருக்கு புதிய நண்பர்களின் அறிமுகமும், அதனால் ஆதாயமும் உண்டாகும்.

**கடகம்:** சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். நீண்டநாளாக எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்வீர்கள்.

**சிம்மம் :** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். முக்கியமான பிரமுகர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று கிடைக்க வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற் கொள்ள நேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பிற்பகலுக்கு மேல் மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம் :** தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சிறு தடை ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**தனுசு:** இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். வாழ்க்கைத்துணை வழி உறவுகள் உதவி கேட்டு வருவார்கள். நண்பர்கள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பாதிப்பு இருக்காது.

**மகரம்:** சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. வெளியூரில் இருந்து வரும் செய்தி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும்.


**கும்பம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். பிள்ளைகளுக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும்.

**மீனம்:** புதிய முயற்சிகளை யோசித்து எடுப்பது நல்லது. கடன்கள் விஷயத்தில் சற்று எச்சரிக்கையாக இருக்கவும். பிற்பகலுக்கு மேல் பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். மாலையில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

## மலர்க்கண்காட்சி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.22
நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவிருந்த மலர்க்கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான மலர்க்கண்காட்சி இன்று 22ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தநிலையில் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக புயலுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுவதாக வானிலை ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளார்கள். அதன்காரணமாகவே மலர்க்கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். எனினும், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்திடம் இருந்து இலவசமாக மரக்கன்றுகளைப் பெறுவதற்கு ஏற்கனவே பதிவு செய்திருக்கின்ற அனைவரும் பசுமை இயக்கத்தின் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு மரக்கன்றுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-33-66-27)

## திருநெல்வேலியில் குருதிக்கொடை



யாழ்ப்பாணம், நவ.22
காளி கோவிலடி சனசமூக நிலையத்தின் 80ஆவது ஆண்டு அமுத விழாவை முன்னிட்டுச் சனசமூக நிலைய நிர்வாகம் நடத்தும் குருதிக்கொடை முகாம் யாழ். திருநெல்வேலி காளிகோவிலடி சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை இடம்பெறவுள்ளது. குருதிக்கொடை முகாமில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ரி-66)

## டெங்கு நுளம்பை கட்டுப்படுத்துங்கள்

யாழ்ப்பாணம், நவ.22
தென்மராட்சிப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் டெங்கு நுளம்பு தொடர்பாக விழிப்புடன் செயற்படுமாறு பொதுமக்களுக்கு சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.
டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்கள், குடியிருப்புகள் மற்றும் காணிகளில் நீர் ஏந்துப் பொருள்கள் காணப்படின் அவற்றை உரப்பைகளில் கட்டிவைத்து உள்ளூராட்சிச் சபைகளின் கழிவகற்றல் வாகனங்கள் வரும்போது கையளிக்கவேண்டும். தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேக்கமடைந்து காணப்படுமிடத்து அவற்றை வெளியேற்றி டெங்கு நுளம்பு உற்பத்தியைத் தடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளனர். (ச-33-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஏமாற்றமளித்த கொள்கையுரை

இலங்கையின் 10ஆவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு நேற்று நடந்து முடிந்திருக்கின்றது. இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை ஆற்றியிருந்தார். அதில் நாட்டில் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கும் விடயங்கள் பலவற்றைத் தொட்டுக்காட்டியிருக்கின்றார். நாட்டின் பொருளாதார நெருக்கடித் தீர்வு, விவசாயத்துக்கான முன்னுரிமை, டிஜிற்றல் தொழில்நுட்ப முன்னேற்றம், வறுமை ஒழிக்கும் செயற்றிட்டங்கள் என அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். நாட்டில் ஒழுக்கமான பிரஜைகளை உருவாக்குவதும் தமது அரசாங்கத்தின் குறிக்கோள் என்றும் ஜனாதிபதி அநுர சுட்டிக்காட்டியிருந்தார். தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும், நாட்டில் இனிமேல் இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும் இடமில்லை என்றும் தனது உரையில் குறிப்பிட்டிருந்த ஜனாதிபதி அநுர, தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான எதையும் தனது உரையில் தவிர்த்திருக்கின்றார். பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிப்பீடமேறியிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் என்று எதிர்பார்த்திருப்பவர்களுக்கு ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடன உரையில் அந்த விடயத்தைத் தவிர்த்திருப்பது ஏமாற்றம் அளிப்பதாகவே இருக்கும்.

அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்ததும் சில வீதிகள் திறக்கப்பட்டிருக்கின்றன, சில இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டிருக்கின்றன. இதுவொரு வரவேற்கத்தக்க நடவடிக்கையே. ஆனால் இந்த விடயத்தில் சிந்திக்கவேண்டிய விடயங்கள் நிறைய இருக்கின்றன. வடக்கில் பல ஆண்டுகளாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த வீதியும், பொதுமக்கள் பலமுறை கோரிக்கை வைத்தும் அகற்றப்படாத இராணுவமுகாமும் ஜனாதிபதி அநுரவின் ஓர் உத்தரவில் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன. தேசியப் பாதுகாப்பு என்ற காரணத்தைக் காட்டி இத்தனைகாலமும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தவற்றை ஓர் உத்தரவில் வழங்கமுடியுமானால், இத்தனைகாலமும் அவற்றை ஏன் மக்களுக்கு வழங்கவில்லை என்ற கேள்வி எழுவது நியாயமானது. அதுவே தமிழ் மக்கள் எப்போதும் இலங்கைப் பிரஜைகள் என்ற நிலையில் இருந்து தள்ளியிருக்கக் காரணமாக இருக்கின்றது. வடக்கு, கிழக்கில் உள்நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட பௌத்த மயமாக்கல்களும், சிங்களக் குடியேற்றங்களும், தமிழர் தாயகப் பகுதியில் இனப்பரம்பல் மாற்றியமைக்கப்படுவதும் இன்றும் தொடர்கின்றன. தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் மக்களின் வளம்கொழிக்கும் பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் தீர்வு காணாமல் வெறுமனே சில சோதனைச்சாவடிகளை அகற்றுவதும், இராணுவத்தின் வசமிருக்கும் காணிகள் சிலவற்றை விடுவிப்பதும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சிக்கலுக்கு ஒருபோதும் நிரந்தரத் தீர்வாக அமையப் போவதில்லை. நாட்டில் இனிமேல் இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும் இடமில்லை என்று கூறியிருக்கும் அநுரகுமார திஸாநாயக்க, தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களின் அடிப்படையைப் புரிந்து செயலாற்ற முயலவேண்டும்.

நாட்டில் சிறுபான்மை மக்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகள் தீர்க்கப்பட்டு, அவர்களுக்குரிய உரிமைகளும், அதிகாரங்களும் வழங்கப்பட்டால் மட்டுமே இந்த நாட்டை இந்துசமுத்திரத்தின் முத்தாக மாற்றமுடியும். ஆனால் நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளை பூசி மெழுகி, சிறுபான்மை மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றமுயன்றால் மீண்டும் இந்த நாடு அதல பாதாளத்தை நோக்கியே பயணிக்கும். நாட்டை முன்னேற்றும் திட்டங்களுடன் அதிகாரத்துக்கு வந்திருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதை உணர்ந்து செயற்படவேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பும்.




எல்லைதாண்டிய மீன்பிடி

## கட்டுப்படுத்தக் கோரி ஜனாதிபதிக்கு தபாலட்டை

முல்லைத்தீவு, நவ.22

முல்லைத்தீவு மாவட்ட சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தினரின் ஏற்பாட்டில், இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறலை உடனடியாக கட்டுப்படுத்தக் கோரி ஜனாதிபதிக்கு தபால் அட்டை அனுப்பும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தற்காலிக பேருந்து தரிப்பிடத்தில் சர்வதேச மீனவர் தினமான நேற்று வியாழக்கிழமை இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச-25,35)



## ரூ. 126.8 பில்லியன் ஈட்டிய மின்சாரசபை

கொழும்பு, நவ.22

இலங்கை மின்சாரசபை இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் 126.8 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது.

இது கடந்த 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 19.8 வீத அதிகரிப்பாகும்.

கடந்த மார்ச் மாதம் 21.9 வீதத்தினாலும் ஜூலை மாதம் 22.5 வீதத்தினாலும் மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்பட்டிருந்தன. மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்பட்ட போதிலும் இலங்கை மின்சாரசபை பெருந்தொகையில் வருமானத்தை ஈட்டி உள்ளது. (ச-இ)

மாத்தறையில்

## துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி!

கொழும்பு, நவ. 22

மாத்தறை மாவட்டத்தில் திக்வெல்ல, வலஸ்கல பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் வலஸ்கல பிரதேசத்தில் டொரமுரே வீதியிலுள்ள கால்நடை வைத்திய அலுவலகத்துக்கு அருகில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை திக்வெல்ல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

## கஞ்சாத்தோட்டம் சுற்றிவளைப்பு



மொனராகலை, கொனகங்ஆர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இரண்டு கஞ்சாத் தோட்டங்கள் சுற்றிவளைக்கப்பட்டதில் மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

தணமல்வில பிரதேசத்தில் வசிக்கும் 30, 32 மற்றும் 47 வயதுடைய மூன்று நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## போதைப்பொருளுடன் இந்தியப்பிரஜை கைது

குஷ் போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் தாய்லாந்தின் பாங்கொக் நகரத்திலிருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார். சந்தேக நபரின் பயணப் பொதியிலிருந்து 1 கிலோ 900 கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

23.11.2024

சனிக்கிழமை - கார்த்திகை - 08

சுபநேரம் : 03.11 - 04.41

ராகுகாலம் : 09.11 -10.41

**நாளொரு நல்வார்த்தை**

"குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டுபண்ணும் என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவதுதான்"

- வங்காரி மாதாய் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் மாபியா கும்பலால் அலுவலர் மீது தாக்குதல்!

## நடவடிக்கை எடுக்காவிடின் போராடுவோம் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கம் காட்டம்

**கிளிநொச்சி, நவ.22**

**பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை தாக்கப்பட்டுள்ளதுடன் கொலை அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சியில் செயற்பட்டுவரும் வடமாகாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.**

தேர்தலுக்கு முதல்நாளான கடந்த 13ஆம் திகதி அன்று கரைச்சிப் பிரதேசசபையின் சபை நிதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அம்பாள்குளம் 2ஆம் குறுக்குத்தெரு வீதியின் புனரமைப்பு வேலைகளை பார்வையிட்டுக்கொண்டிருந்தபோது அங்கு வந்த ஐந்து பேர் கொண்ட குழுவொன்று தாக்குதல் நடத்தியது. அத்துடன் கொலை செய்து புதைப்போம் என்றும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. கடமை நேரத்தில் தாக்கப்பட்டமையால் தனது கடமையை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அச்சுறுத்தலான சூழ்நிலை காணப்படுகின்றது என்றும் குறித்த உத்தியோகத்தர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். அதேவேளை பணியில் ஈடுபடும் அலுவலர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறினால் தொடர் பணிப்புறக் கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை வடமாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கப் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர். (ச-33-125,20)



# கிளிநொச்சியில் உணவுப் பாதுகாப்பு இருநாள் பயிற்சிநெறி!

கிளிநொச்சி, நவ.22

கிளிநொச்சியில் உலக உணவுத் திட்டத்தின் கீழான உணவுப்பாதுகாப்பு தொடர்பான வலையமைப்பு பற்றிய இருநாள் பயிற்சிநெறி , இரு நாள்கள் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில், கிளிநொச்சி மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன் கலந்துகொண்டு குறித்த பயிற்சிநெறியை ஆரம்பித்து வைத்தார். (ச-33-113)

# தகவல் அறியும் சட்டம் யாழில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.22

யாழ். அரசசார்பற்ற இணையத்தின் ஏற்பாட்டில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பாக சிவில், சமூகம் மற்றும் ஊடகவியலாளருக்கான கருத்தரங்கு யாழ். டேவிட் வீதியிலுள்ள திருமறைக்கலா மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பணதூய்மையாக்கல், இலஞ்சம், ஊழல், சொத்துகள் பொறுப்புகள், சட்டவிரோதமான விடயம், தகவல் உரிமைச் சட்டத்தில் அரச உத்தியோகத்தர்களுடான முறையற்ற செயல், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துகள்,பொறுப்புகள் விடயம், நெறிமுறைச் செயல்கள், ஊழலை ஒழிப்பதற்கான இலஞ்ச ஊழல் சட்டம், இலஞ்சம் ஊழலுக்கான காரணங்கள், மக்களுடைய குறைவான விழிப்புணர்வு, ஊழலைக் கட்டுப்படுத்த மற்றும் குறைக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை, தகவல் அறியும் சட்டமூலமாக அதிகாரத்தினை கேட்டல், பிரதேசசபை, நகரசபை, மாநகரசபை ஆகியவற்றில் தகவல் உரிமைச்சட்டம் தொடர்பாக மக்கள் கேள்வி கேட்கவேண்டும் என கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

(ச-45-125-20)

# கொழும்புத்துறையில் டெங்குக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், நவ,22



கொழும்புத்துறையில் டெங்கின் தாக்கம் அதிகரித்ததைத் தொடர்ந்து அங்கு நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்
தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மாநகர சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். குறித்த பகுதியில் கடந்த ஒரு வார காலப்பகுதியில் மாத்திரம் 35 பேர் வரை டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜே/63 கிராம அலுவலர் பிரிவில் ஆனந்தன் வடலிவீதி, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை வீதி போன்ற பகுதிகளில் டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மாலை வேளைகளில் குறித்த பகுதிகளில் புகை அடிக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-25, 17)



# 12 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதாகிய 12 இந்திய மீனவர்களும், எல்லைதாண்டிய வழக்கில் நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்டனர். எனினும் கடற்படையினர் மீது தாக்குதல் நடத்திய வழக்கில் அவர்களுக்கான விளக்கமறியலை நீடித்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் குறித்த 12 இந்திய மீனவர்களை இலங்கைத் கடற்படையினர் கைது செய்து அன்றைய தினமே பருத்தித் துறை நீதிமன்றில் முற்படுத்தினர்.

கைது நடவடிக்கையின்போது கடற்படையினர் மீது மீனவர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது எனத் தெரிவித்து பருத்தித்துறை பொலிஸாரினாலும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்குகளுக்கமைய கைது செய்யப்பட்ட மீனவர்களை நேற்றுமுன் தினம் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் கிருசாந்தன் பொன்னுத்துறை உத்தரவிட்டிருந்தார்.

அதனையடுத்து வழக்கு நேற்றுமுன் தினம் மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்படி உத்தரவு நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டது. (ச-100)


# வெற்றுக் காணிகளை உடன் துப்புரவு செய்க

## சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.22

யாழ். மாநகரப் பிரதேசத்தில் மக்கள் குடியிருக்காத வெற்றுக் காணிகளில் படர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகளை உடன் அகற்றித் துப்புரவு செய்யுமாறு சுகாதாரப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

இந்த நிலையில் அவ்வாறான காணிகளுக்கு சிவப்பு அறிவித்தல்களும் ஒட்டப்பட்டு வருகின்றன. (ச-22-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியத் தூதுவரை சந்தித்தது தமிழரசின் நாடாளுமன்றக் குழு

கொழும்பு, நவ. 22

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவினருக்கும், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நேற்று நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையிலான தமிழரசின் நாடாளுமன்றக் குழுவுக்கும், இந்தியத் தூதுவருக்கும் இடையிலான இந்தச் சந்திப்பின் போது, நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பிலும், தமிழரசுக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் அத்தகைய அரசியல் நகர்வுகளில் இந்தியாவின் வகிபங்கு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. (ம-இ)

**தவறவிடப்பட்டது**

ஞானப்பிரகாசம் தனபாலராஜா என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்காணும் இலக்கத்திற்குத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**077 977 0772**

**பெண் அலுவலர் தேவை**

சட்டத்தரணி அலுவலகத்திற்கு கணினி அறிவுள்ள **பெண் அலுவலர் தேவை.**

குறிப்பு: யாழ் நகரப் பகுதியிலிருந்து 10 Km க்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.

**076 578 9372**

(CS/56724) J-1

தென்மராட்சியில்

# காற்றுடனான மழையால் பல குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.22

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பெய்த கடும் காற்றுடனான மழையால் தென்னைமரம் முறிந்து வீழ்ந்ததில் இரண்டு வீடுகள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

கொடிகாமம் தவசிக்குளம் மற்றும் மட்டுவில் சந்திரபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. இந்த வீடுகளில் வசித்த நான்கு குடும்பங்களைச் சேர்ந்த ஐவர் வேறு இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை நேற்றுமுன்தினம் இரவு பெய்த கடும் மழையினால் நாவற்குழி ஐந்து வீட்டுத்திட்ட பகுதியைச் சேர்ந்த எட்டு வீடுகளுக்குள்ளும் கொடிகாமம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் ஒரு வீட்டினுள்ளும் மழை வெள்ளம் புகுந்துள்ளது என கிராம அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். (ச-33-9)

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சையின்போது இறப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

வட்டுக்கோட்டைப் பகுதியில், கடந்த மாதம் 29ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டைப் பகுதியில் காருடன் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த மகேஸ்ரன் ராமதாஸ் (வயது-41) யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)



# சந்தன விக்கிரசிங்கவுக்கு பிரியாவிடை நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.22

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் முப்படைகளின் தளபதியாகக் கடமைபுரிந்த மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரசிங்கவுக்கான பிரியாவிடை மற்றும் கௌரவிப்பு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்துகொண்டு வாழ்த்துப் பாமாலையை வழங்கிவைத்தார்.

வடமாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், யாழ். மாவட்ட பதில் மாவட்டச் செயலர் ம. பிரதீபன், யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் கலாநிதி த. சத்தியமூர்த்தி மற்றும் வடமாகாண பிரதிப் பொலிஸ் அதிபர், மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், உள்ளிட்ட இராணுவ, பொலிஸ் உயரதிகாரிகள், இராணுவ உத்தியோகத்தர்கள், மதத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-45-27)

Best Wishes

# யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்

57 ஆவது அகவையில் சேவைநலன் பாராட்டுவிழா



Congratulations

திருமதி சறோஜாதேவி குலசேகரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

(BA. Dip. in Edu - SLTS - 1)

**சேவை விபரம்**

- யா / யூனியன் கல்லூரி - 01.09.1993 - 05.01.1995
- யா / மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி. - 06.01.1995 - 30.01.2005
- யா / சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்கலவன் பாடசாலை - 31.01.2005 - 01.01.2014
- யா / தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாலயம் - 02.01.2014 - 16.12.2022
- யா / கட்டுவன்புலம் மகாவித்தியாலயம் - 19.12.2022 - 01.05.2024

**வாழ்த்துப்பாமாலை**

செங்கமல வதனத்துடன்
செகமதனி லுலாவிவந்து,
பங்கமிலாப் பாசத்துடன்
பழகுமன்பிற் கினியாளாய்,
வங்கக்கடல் போலவார்த்து
வடிவழகாய் மொழிபகன்று,
தங்கமன்றோ வென்றீங்கே
தரணியேற்கும் தாயுமிவர்.

மற்றவரின் நலனுக்காய்
மனிதமனத் தகமுணர்ந்து,
உற்றவழி காட்டிநின்று
உதவுவதில் திரேசாவாய்...
வெற்றியுடன் மேன்மையுற
வேகத்துடன் உதவிநின்று,
சுற்றத்துட னனைவரொடும்
சொந்தமாகு மன்னையிவள்.

தன்னலமும் பார்த்திடாமல்
தாராள மனத்தினளாய்,
பின்னவர்க்குப் பாடமதைப்
பிழையின்றிக் கற்பித்துச்,
சன்னமென வுளம்புகுந்த
சறோரீச ரென்றென்றும்,
மின்னுமுரு வதனமொடு
மேன்மையுற வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:

பாடசாலைச் சமூகம்
யா/ கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்
தெல்லிப்பளை.

(cs56716) (hd)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, நுணாவில் மேற்கு - விளை வேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ் தான வருடாந்த பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது. இதன்போது செயலாளர் கூட்ட அறிக்கை, பொருளாளர் கணக்கு அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படவுள் ளன. (ச-25)

# அரச இலக்கிய விருது வழங்கல்

கொழும்பு, நவ.22

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலு வல்கள் அமைச்சு, கலாசார அலுவல் கள் திணைக்களம், இலங்கை கலைக் கழகம் மற்றும் அரச இலக்கிய ஆலோ சனைக்குழு ஆகியவற்றின் ஏற்பாட்டில் அரச இலக்கிய விருது வழங்கல்விழா கொழும்பு அலரி மாளிகையில் எதிர்வ ரும் 27 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க கலந்துகொள்ளவுள்ளார்.

இதன்போது சிங்கள, தமிழ், ஆங் கிலமொழிகளில் 2023 ஆம் ஆண்டு தொடக்கம் பதிப்பாக வெளி வந்த சுய நாவல், சுய சிறுகதை, சுயகவிதைப் படைப்பு, சுயஇளையோர் இலக்கிய படைப்பு, சுயபாடலாக்கத் தொகுப்பு, சுய நாடகம், சுய அறிவியல் புனைகதை, சிறுவர் இலக்கியப் படைப்பு, சுய புல மைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு, நானாவித விடய நூல்கள், மொழிபெ யர்ப்பு நாவல், மொழிபெயர்ப்பு சிறுக தைத் தொகுப்பு, மொழிபெயர்ப்பு கவிதைப் படைப்பு, மொழிபெயர்ப்பு நாடகம், மொழிபெயர்ப்பு புலமைத் துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு ஆகிய பிரி வுகளுக்கான சிறந்த படைப்புக்கான விருதுகள் வழங்கப்படவுள்ளன. இது தவிர இலங்கையின் தமிழ் இலக்கியத் துறைக்கு ஆற்றிய உன்னத சேவை நிமித்தம் 'சாகித்தியரத்னா' எனும் உயர் அரச விருது தமிழ்மொழியில் பிரபல இலக்கியப் படைப்பாளி திருமதி அன்ன லட்சுமி இராஜதுரை, சிங்கள மொழியில் தகைசார் பேராசிரியர் ஜினதாச தனன் சூரிய, ஆங்கிலமொழியில் பேராசிரியர் வோல்டர் பெரேரா ஆகியோருக்கு வழங் கப்படவுள்ளது. (ச-25)

## மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 04 . 1975

மறைவு 21 . 11 . 2024

### மகேஸ்வரன் ஊர்மிலா

அளவெட்டி மேற்கு, தம்பளாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் ஊர்மிலா நேற்று (21.11.2024) புதன்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சிவபாலன் - வாசுகிதேவி தம்பதியரின் அன்பு மகளும், சுப்பிரமணியம் மகேஸ்வரனின் அன்பு மனைவியும், சசிந்தனின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2024) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
076 343 2956
076 055 9201

தம்பளாவத்தை,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

(cs 56726) (N-1)

## பன்னிரண்டாம் ஆண்டின் நிறைவினிலே



மண்ணில் 02 . 01 . 1941

விண்ணில் 05 . 12 . 2012

### அமரர் சின்னப்பா குணரத்தினம்

(ஓய்வுநிலை உப தபால் அதிபர் - கனகராயன்குளம்)


திதி : அபரபக்க ஸப்தமி - 22.11.2024

அப்பா...!
விருப்போடு அனைவரையும்
அரவணைத்து மகிழ்ந்தீர்களே...!
கருத்தோடு நீங்கள் கூறும் அறிவுரையில்
நாம் வாழ்ந்தோமே...! - உங்கள்
திருவார்த்தைகள் தான் என்றும்
எம்மை வழிநடத்தும் அப்பா...!

நீங்கா நினைவுடன்...
குடும்பத்தினர்
(ஸ்ரேசன் றோட், பளை)

இல.695/2,
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும்... நன்றி நவிலலும்



கடந்த 23.10.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### நடராஜா இராஜேஸ்வரன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.11.2024) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அமரரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத்தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் **யாழ். நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீதுர்க்கா மணிமண்டபத்தில்** நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் மரணச்செய்தி கேட்டு துயருற்ற வேளையில் நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIP BOOK ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், துண்டுப்பிரசுரங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலி, பதாகைகள் காட்சிப்படுத்தியவர்களுக்கும் மற்றும் மலர் வளையம் கொண்டு அஞ்சலித்தவர்களுக்கும், இன்றுவரை சகல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்துகொண்டிருக்கும் நல் உள்ளம்கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இரு கரம் கூப்பி நன்றிகளை எமது குடும்பத்தின் சார்பாக தெரிவித்து நிற்கின்றோம்.

**(இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

92, யாழ்வீதி,
யாழ்ப்பாணம்.

(CS1900)N-1

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### மகானந்தம் சத்தியபாமா

தொம்பை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகானந்தம் சத்தியபாமா (வேவி) நேற்று (21.11.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் (ஓய்வூதியர்) - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (ஓய்வூதியர் - CTB)- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மகானந்தம் (ஆனந்தம்- ஓய்வூதியர், தபால் திணைக் களம் - சுன்னாகம்) அவர்களின் அன்பு மனைவியும், தர்யுன் (அஞ்சல் உதவியாளர், சுன்னாகம்), சோபிகா, வினோகா (ஆசிரியர், திருமுறி கண்டி இந்து வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கஜேந்திரன் (ஆசிரிய ஆலோசகர் - வலிகாமம் கல்வி வலயம்), சஜீவ்தீபன் (AIA காப்புறுதி உத்தியோகத்தர்), ஸித்திறூபா (உதவி அஞ்சல் அதிபர், காங்கேசன்துறை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆதித்தன், திவ்வியா, ஆதிரையன், பிரஜீவன், அக்‌ஷயா, டிவியன் ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சரஸ்வதி, உருக்குமணி, தவராசா, யோகராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தங்கவேல், சர்மிளா மற்றும் காலஞ்சென்றவர்களான அருமைத்துரை, அஞ்சலினா ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற மகாலிங்கம், மகாதேவன், அரசலிங்கம், சண்முகலிங்கம் (ஓய்வூதியர், இலங்கை மின்சார சபை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2024) வெள்ளிக் கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 4745 691

# விழிப்பூட்டல் செயலமர்வு

யாழ்., நவ. 22

யாழ்.நீரிழிவுக் கழகம் மற்றும் யாழ்.போதனா மருத்துவமனை நீரிழிவுச் சிகிச்சை நிலையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்பூட்டல் செயலமர்வு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசா லையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. யாழ்.நீரிழிவுக் கழகச் செயலா ளர் க.கணபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். போதனா மருத்து வமனையின் மருத்துவ நிபுணர் ம.அரவிந்தன் நீரிழிவால் ஏற்படும் பாதிப்பு குறித்தும், அதைக் கட்டுப்ப டுத்துவது குறித் தும் விரிவுரையாற்றி னார். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெ. வெங்காயம் விலை உயர்வு

கொழும்பு, நவ. 22

உள்நாட்டு பெரிய வெங்காயம் ஒரு கிலோவின் மொத்தவிலை 400 ரூபாவாகவும் வெளிநாட்டு வெங்காயத்தின் மொத்தவிலை 370 ரூபாவாகவும் அதிகரித்துள்ளதாக தம்புள்ள பொருளாதார மத்திய வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், தூத்துக்குடி, ஈரான் உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்வது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேவேளை, வணிகர்கள் வெங்காயத்தை மறைத்து வைத்து விலை ஏற்றம் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# துப்பாக்கி, தோட்டாக்களுடன் முன்னாள் படையதிகாரி கைது

## புலிகளின் ஆயுதங்களா என பொலிஸார் தீவிர விசாரணை

**கொழும்பு, நவ. 22**

**முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் கைத்துப்பாக்கி மற்றும் 143 தோட்டாக்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பில் பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.**

அம்பாறை விசேட அதிரடிப்படை புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் இகினியாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாவின்ன பரகஹகலே பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மைக்ரோ ரக தானியங்கி கைத்துப்பாக்கி மற்றும் 143 தோட்டாக்கள் மற்றும் இரண்டு தோட்டா மகசின்கள் மற்றும் ஆயுதங்களை சுத்தம் செய்யும் கருவி ஆகியவற்றுடன் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மீட்கப்பட்ட துப்பாக்கியின் இலக்கம் அழிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் தொடர்பிலும் அவர் வசம் மீட்கப்பட்ட துப்பாக்கி தொடர்பிலும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மேலும், சந்தேநகநபர் குறித்த துப்பாக்கியை போர் நடைபெற்ற வேளை வட பகுதயில் கடமையில் இருந்து எடுத்து வந்தாரா அல்லது விடுதலைப் புலிகளின் பிரதான தளபதிகள் பாவித்த துப்பாக்கியா அல்லது இராணுவக் களஞ்சிய சாலையில் இருந்து பெறப்பட்டு மறைத்து வைக்கப்பட்டதா அல்லது பல்வேறு குற்றச் செயலுக்காக எடுத்துவரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டதா? என பல கோணங்களில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச-இ)



## 29 பிரதி...

01. பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ - பொருளாதார அபிவிருத்திக்கான பிரதி அமைச்சர்
02. நாமல் கருணாரத்ன - விவசாயம் மற்றும் கால்நடைக்கான பிரதி அமைச்சர்
03. வசந்த பியதிஸ்ஸ - கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டலுக்கான பிரதி அமைச்சர்
04. நலின் ஹெவகே - தொழிற்கல்விக்கான பிரதி அமைச்சர்
05. ஆர்.எம்.ஜயவர்தன - வர்த்தகம், வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுக்கான அபிவிருத்தி பிரதி அமைச்சர்
06. கமகெதர திஸாநாயக்க - புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்களுக்கான பிரதி அமைச்சர்
07. டி.பீ.சரத் - வீடமைப்புக்கான பிரதி அமைச்சர்
08. ரத்ன கமகே - கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வள பிரதி அமைச்சர்
09. மஹிந்த ஜயசிங்க - தொழில் பிரதி அமைச்சர்
10. அருண ஜயசேகர - பாதுகாப்புக்கான பிரதி அமைச்சர்
11. அருண் ஹேமச்சந்திர - வெளிவிவகாரம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்
12. அன்ரன் ஜெயக்கொடி - சுற்றாடல் பிரதி அமைச்சர்
13. மொஹமட் முனீர் - தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர்
14. பொறியியலாளர் எரங்க வீரரத்ன - டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்
15. எரங்க குணசேகர - இளைஞர் விவகார பிரதி அமைச்சர்
16. சதுரங்க அபேசிங்க - கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சர்
17. பொறியியலாளர் ஜனித் ருவன் கொடிதுவக்கு - துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்
18. நாமல் சுதர்சன - பெண்கள் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர்
19. ருவன் செனரத் - மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்
20. கலாநிதி பிரசன்ன குமார குணசேன - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்
21. மருத்துவர் ஹன்சக விஜயமுனி - சுகாதார மற்றும் ஊடக பிரதி அமைச்சர்
22. உபாலி சமரசிங்க - கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்
23. ருவன் சமிந்த ரணசிங்க - சுற்றுலா பிரதி அமைச்சர்
24. சுகத் திலகரத்ன - விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்
25. சுந்தரலிங்கம் பிரதீப் - பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர்
26. சட்டத்தரணி சுனில் வட்டகல - பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார பிரதி அமைச்சர்
27. கலாநிதி மதுர செனவிரத்ன - கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர்
28. கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும - நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர்
29. கலாநிதி சுசில் ரணசிங்க - காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர். (அ-ம-இ)

24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 11.11.1949
விண்ணில் 17.11.2000

சிதம்பரப்பிள்ளை செல்வரத்தினம்
(முன்னாள் ஆசிரியர் பாண்டியன் குளம் அரசினர் தமிழ்ப்பாடசாலை

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகி போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்...

20A,
(N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி பெரிய பரந்தன் வட்டாரத்துக்கான மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு உருத்திரபுரம் முருகன் ஆலய அறநெறிப்பாட சாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடைபெற்றது. பெரிய பரந்தன் வட்டார தமிழரசுக்கட்சியின் அமைப்பாளர் சு.யதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொண்டார். (ச-25.113)



### புலிகளின் காலத்தில் இயங்கிய

# ‘கற்பகச்சோலை’ திட்டத்தினூடாக பனை வளத்தை பாதுகாப்போம்!

### பனை அபிவிருத்திச்சபை தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 22

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் நடைமுறையில் இருந்த ‘கற்பகச்சோலை’ பனை நடுகைத்திட்டத்தை மீள ஆரம்பித்து பனை வளத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் விநாயகமூர்த்தி சகாதேவன் தெரிவித்துள்ளார். யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- இலங்கையை விட தென்கிழக்காசிய நாட்டில் பின்னர் உருப்பெற்ற பனைவளம் இன்று அந்தப் பிராந்தியத்தில் உயர்ந்த வளமாகக் காணப்படுகிறது.

எமது நாட்டுக்கே உரித்தான பனை வளம் மேம்படுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது. இதன் அடிப்படையில் கார்த்திகை மாதம் புனிதமான மர நடுகை மாதமாகக் காணப்படுகிறது. தமிழ் மக்கள் இந்தக் காலத்தில் பனை மரத்தினை நடுகை செய்யவேண்டும்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் பொருண்மியத் துறையினால் கற்பகச்சோலை எனும் திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டு 10 கோடி பனை மரங்கள் நடும் திட்டத்தின் கீழ் பனம் விதைகள் நடப்பட்டன. அந்தக் காலத்தில் நடப்பட்ட பனைமரங்களே இன்று பயன்தரு நிலைக்கு வந்திருந்தாலும் கோடிக்கணக்கான பனைமரங்கள் போர்க் காலத்திலும் போரின் பின்னரும் அபிவிருத்தி எனும் நோக்கிலும் அழிக்கப்பட்டு வருகின்றன. இந்தநிலையில் இந்த மரநடுகை மாதத்தில் ‘கற்பகச்சோலை’ திட்டத்தை மீள உருவாக்கி ‘பனைக் காவலர்’ என்ற விருதையும் வழங்கவுள்ளோம். மேலும் பாடசாலை மாணவர்களுக்கு ‘கற்பகசெல்வம்’ என்ற திட்டமும் ஊடகவியலாளர்களுக்கு ‘கற்பக ஓலை’ திட்டமும், இளைஞர்களுக்கு ‘பனை வீரர்கள்’ திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அத்துடன் பனைமர கணக்கெடுப்பினை டிஜிற்றலினூடாக முன்னெடுக்கவுள்ளோம். பனை வெட்டுவதற்கான முறை என்பது அதனை மீள்நடுகை செய்யும் ஒன்றாக அமைய வேண்டும்.

கள்ளுற்பத்திக்கான தொழில் தகைமை சான்றிதழை வழங்கி பாடத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். கோழித்தீவனம் மற்றும் கால்நடைத்தீவன இறக்குமதியை கட்டுப்படுத்த பனை உற்பத்தியின் மூலமும் வெற்றிகண்டுள்ளோம். அதேவேளை பனை சார் ஏற்றுமதியாளர்களுக்கான கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது - என்றார். (ச-125.20)

## மாற்றுத்திறனாளிகளின் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், நவ.22

மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

போட்டிகளில் சண்டிலிப்பாய்ப் பிரதேச மாற்றுத்திறனாளிகளின் ஆண்கள் பிரிவு முட்டி உடைத்தலில் மூன்றாம் இடத்தையும், சங்கீதக் கதிரையில் பெண்கள் பிரிவு இரண்டாம் இடத்தையும், சங்கீதக் கதிரையில் ஆண்கள் பிரிவு இரண்டாம் இடத்தையும், கூடைக்குள் பந்து போடுதலில் பெண்கள் பிரிவு மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (ச-ரி-66)

## தொழுநோயைக் கட்டுப்படுத்த விழிப்புணர்வுகள் அவசியம்

வவுனியா,நவ.22



இலங்கையில் அதிகரித்து வரும் தொழு நோயாளர்கள் தொடர்பான விழிப்புணர்வு மக்களுக்கு அவசியமாகக் காணப்படுகிறது என்று தொழு நோயாளர்கள் தொடர்பில் பணியாற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் தொழு நோயாளர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக சுகாதாரத் திணைக்களம் சுட்டிக்காட்டுகின்றது. அந்தவகையில் தொழு நோயாளர்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நோய் அறிகுறிகள் தொடர்பில் மக்களுக்கு வெளிப்படுத்தவும் வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

பலரிடம் தொழுநோய் குறித்த விழிப்புணர்வு இல்லாமையால் நோயின் தாக்கம் அதிகரித்ததன் பின்னரே மருத்துவமனைகளை நாடிச் செல்கின்ற நிலைமை காணப்படுகிறது.

கிராம மட்டங்களில் இருந்து நகர்ப் பகுதி வரை தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-22-110)



## ‘புத்தக யாசகன்’ செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், நவ.22

சமூகத்தையும், யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தையும் நூல்களின் வாயிலாக ஒருங்கிணைக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் ‘புத்தக யாசகன்’ அன்பளிப்புச் செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்ட நிகழ்வு கைதடிப் பிரதேசசபை நூலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஒருதொகுதி நூல்கள் கைதடிப் பிரதேசசபையின் நூலக நிர்வாகத்தினிடம் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி. விக்னேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் சிரேஷ்ட பொருளாளரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான சு.கபிலன், யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர் மற்றும் கலைப்பீட மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி-66)

## மனவெழுச்சி செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ. 22

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான சமூக மனவெழுச்சி தொடர்பான செயலமர்வு அதிபர் தி. அபராஜிதன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் வளவாளர்களாக தென்மராட்சி கல்வி வலய வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி எஸ்.ஜெகானந்தன் மற்றும் வரணி பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தி.கலைவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-159)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வடமாகாணத்தில்...

வடமாகாணத்தில் இன்றையதினம் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், வெள்ளப் பேரிடர் நிலை ஏற்படுவதற்குக் கூடுதலான சாத்தியங்கள் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை அதிகாரி தர்மரட்ணம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நவம்பர் மாதம் 23ஆம் திகதியளவில் (நாளை) தென்கிழக்கு வங்காள விரிகுடாவுக்கு மேலாக குறைந்த காற்ற முத்தப் பிரதேசம் விருத்தியடையக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இது நாளை (இன்று) வெள்ளிக்கிழமை அல்லது நாளைமறுதினம் (நாளை) தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக ஒரு தாழமுக்கமாக வலுவடையக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது. இந்தத் தொகுதி மேலும் வலுவடைந்து இலங்கையின் கிழக்குக் கரையை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இதனால், வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் மாலையில் அல்லது இரவில் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. மேல், சப்ரகமுவ, ஊவா பகுதியில் காலைவேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகிறது.

வெள்ளப் பேரிடர் நிலை தொடர்பில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள். அத்துடன் அநுராதபுரம் மாவட்டத்திலும் வெள்ளப் பேரிடர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடற்கரையோரங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கும். இதன்படி கடற்பரப்புகளில் மணித்தியாலத்துக்கு 20 கிலோமீற்றர் தொடக்கம் 30 கிலோமீற்றர் வரையில் காற்றின் வேகம் அதிகரித்திருக்கும். கடற்கொந்தளிப்பும் காணப்படும் என்பதால், மீனவர்கள் அவதானத்துடன் செயற்படுவது அவசியம் - என்றார். (அ-ம-125)

## நாணய...

நாளை கைச்சாத்தாகவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

10ஆவது நாடாளுமன்றத்தின் கொள்கை விளக்கவுரையை ஜனாதிபதி அநுர நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அனைத்து இன மக்களும் எம்மீது நம்பிக்கை கொண்டு அதிகாரத்தை வழங்கியுள்ளார்கள். அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எமக்கு வாக்களித்தவர்கள் மட்டுமல்ல வாக்களிக்காதவர்களும் இந்த நாட்டின் மக்கள்தான். அவர்களுக்கான தாகவுமே எனது பயணம் அமையும். தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாட்டில் இனி இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும் இடமில்லை. மக்களால் வெறுக்கப்படும் நாடாளுமன்றம் மக்களை ஆள்வதற்குத் தகுதியற்றது. ஆகவே மக்களால் விமர்சிக்கப்படும் நாடாளுமன்றம் தோற்றம் பெற இடமளிக்க முடியாது. நாடாளுமன்றம் மக்களுடன் நெருக்கமாக செயற்படவேண்டும். இந்த நாடாளுமன்றம் மக்களின் பரிசோதனையில் வெற்றியடையவேண்டும். ஜனாதிபதி உட்பட அனைவரும் நாட்டின் சட்டத்துக்கு அடிபணியவேண்டும். நாட்டில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய குற்றங்களை முறையாக விசாரணை செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுப்போம். சிறந்த மாற்றத்துக்கு அரசியல் கட்டமைப்பு மாற்றமடைவதைப் போன்று, சமூக கட்டமைப்பும் மாற்றம்பெற ண்டும் - என்றார். (அ-ம-இ)

## டக்ளஸுக்கு...

தொடர்பில் 2016ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவா தா குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் வெள்ளவத்தை பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தகர் ஒருவருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைக்காக நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, சாட்சியமளிப்பதற்காக டக்ளஸ் தேவானந்தா நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவர் உடல் நிலை சரியில்லாமல் இருப்பதாக அவரது வழக்கறிஞர் தெரிவித்தாலும், அதை உறுதிப்படுத்தும் மருத்துவ சான்றிதழ்கள் எதுவும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. இதையடுத்தே டக்ளஸுக்கு எதிராக பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## மோசடியில்...

தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே அந்தப் பெண் கைது செய்யப்பட்டிருந்தார்.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து மோசடியான முறையில் பணம் பெற்றமை, பண மோசடியில் ஈடுபட்டமை, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தில் முறையான பதிவுகள் இன்றி வெளிநாட்டுக்கு அனுப்பும் முகவராக தன்னை அடையாளப்படுத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் அந்தப் பெண்ணுக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருந்தது. சுமார் 4 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட மோசடியில் அவர் ஈடுபட்டதும், பணக் கொடுக்கல் வாங்கல்கள் அந்தப் பெண்ணின் வங்கிக் கணக்கு மூலமாக மேற்கொள்ளப்பட்டதும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் லெனின்குமார் முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே அந்தப் பெண்ணுக்கு 35 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## டிசெம்பர்...

நாடாளுமன்ற செயலாளரின் அறிவிப்பு, சபாநாயகர் தெரிவு, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாணம், பிரதி சபாநாயகர் தெரிவு, குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவு உள்ளிட்ட நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் சபை நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது.

அதன்பின்னர் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை இடம்பெற்றது. ஜனாதிபதியின் உரையை அடுத்து நாடாளுமன்றம் டிசெம்பர் 3ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. இதன்படி டிசெம்பர் 3ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடவுள்ளது. (அ-ம-44)

## தமிழரசின்...

10ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நேற்று நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு நேற்றையதினம் நாடாளுமன்ற நூலகக் கட்டடத்தில் கூடியது.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நடைபெற்ற குழுக் கூட்டத்திலேயே, கட்சியின் ஊடகப் பேச்சாளராக நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் நியமிக்கப்பட்டுள்ளார். (அ-ம)

## சபாநாயகரானார்...

இதனைத் தொடர்ந்து சபாநாயகரின் பெயரை முன்மொழிந்த பிரதமர் மற்றும் வழிமொழிந்த அமைச்சர் ஆகியோர் சம்பிரதாயபூர்வமாக புதிய சபாநாயகரை அக்கிராசனத்துக்கு அழைத்துச் சென்றனர்.

சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்ட கலாநிதி அசோக ரன்வலவுக்கு பிரதமர் ஹரிணி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து புதிய பிரதி சபாநாயகராக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவ கலாநிதி மொகமட் ரிஸ்வி சாலி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

பிரதி சபாநாயகர் பதவிக்கு மருத்துவ கலாநிதி மொகமட் ரிஸ்வி சாலியின் பெயரை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ முன்மொழிந்தார். அதனை அமைச்சர் சரோஜா போல்ராஜ் வழிமொழிந்தார். (அ-ம-44)

## பெப்ரவரியில்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2025ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள் அடுத்த மாதம் குறைநிரப்புப் பிரேரணை மூலமாக மேற்கொள்ளப்படவுள்ளன. அதன் பின்னர் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படவுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக, வறுமை நிலையில் உள்ள மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக விசேட கொடுப்பனவு வழங்கப்படும். வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக அரச சேவையாளர்களின் வேதனம் அதிகரிக்கப்படும். அத்துடன் அஸ்வெசும கொடுப்பனவும் அதிகரிக்கப்படும் - என்றார். (அ-ம-இ)

## பெண்ணிடம்...

ஒளிப்படத்தைக் காட்டி மிரட்டியதுடன், அவரிடம் பாலியல் லஞ்சமும் பணமும் கோரியுள்ளனர்.

இதையடுத்து, பொலிஸாரின் மிரட்டல்கள் மற்றும் பாலியல் லஞ்சம் கோரியமைக்கான ஆதாரங்கள் என்பவற்றைத் திரட்டிய அந்தப் பெண் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளார். முறைப்பாட்டுக்கு அமைய, மேலதிக நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார், மேற்படி இரண்டு பொலிஸ் அதிகாரிகளையும் கைது செய்துள்ளனர்.


சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சந்தேகநபர்களான பொலிஸ் அதிகாரிகளை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-26)

## யாழ்...

சேதமடைந்துள்ளதாக யாழ். மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

நேற்று வியாழக்கிழமை மாலை வரையான நிலவரப்படியே பாதிப்புகள் தொடர்பான இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தநிலையில் யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்படக்கூடிய இடங்களை அடையாளப்படுத்தி முன்னாயத்த நடவடிக்கைகளை எடுக்குமாறும், இடர்நிலை காரணமாக வதிவிடங்களை விட்டு வெளியேறித் தற்காலிக தங்குமிடங்களில் தங்கியிருப்போருக்குச் சமைத்த உணவு வழங்குமாறும் பிரதேச செயலாளர்களுக்கு யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (அ-ம-26-125-20-66)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
31 . 03 . 1939



மறைவு
23 . 10 . 2024

கடந்த 23.10.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் கோபாலசிங்கம் சரஸ்வதி**

திதி : ஐப்பசிமாத தேய்பிறை ஸப்தமி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (22.11.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணி யளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.


இல 34, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

(CS/56707) J-1

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 09 . 1944



மறைவு
16 . 11 . 2024

**திரு. வைத்திலிங்கம் சச்சிதானந்தம்**

**(முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)**

யாழ்ப்பாணம், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கரவெட்டியை வசிப்பிடமாகவும், அவுஸ்ரேலியாவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திரு. வைத்திலிங்கம் சச்சிதானந்தம் (முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்) கடந்த 16.11.2024 சனிக்கிழமை சிட்னி, அவுஸ்ரேலியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பகீரதன் (மருத்துவர்), சத்தியன் (பொறியியலாளர்), மயூரன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அஞ்சலா, சரண்யா, ஆதித்யா ஆகியோரின் அன்பு மாமனாரும், அக்ஷயன், நேத்திரன், கவினயன், ஆதிரா, அக்ஷரா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், சதானந்தம், திலகவதி, கமலநாதன், ஞானப்பூங்கோதை, காலஞ்சென்றவர்களான செல்வவிநாயகம், சிவானந்தம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தில்லைநாதன், மனோகரன், சர்வேஸ்வரி, வதனா, மகேஸ்வரி, தவம், திலகவதி, ஞானேஸ்வரி, பத்மநாதன், சுந்தரலிங்கம், சக்திதேவி, சிவயோகதேவி, நிர்மலா, காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், குலராஜவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலகிருஸ்ணன், சேதுராகவன், அமல்ராஜ், அமரர் செல்வராசா ஆகியோரின் சகலனும், செல்வநாதன் - ஜெகதீஸ்வரி, ஆனந்தநடேசன் - தனவதி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை மெல்பேர்னில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: அன்றைய தினம் (24.11.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு அன்னார் வாழ்ந்த பயித்தோலை அச்சுவேலி தெற்கில் அமைந்துள்ள இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தகவல்:
செல்லப்பா தில்லைநாதன் (மைத்துனர்) + 9477 301 3432
வைத்திலிங்கம் சதானந்தம் (சகோதரன்) + 9477 324 1987
சச்சிதானந்தம் பகீரதன் (மகன்) + 6141 505 4363
சச்சிதானந்தம் சத்தியன் (மகன்) + 6140 343 6970
சச்சிதானந்தம் மயூரன் (மகன்) + 659 138 3795

சம்பந்தர் இல்லம்,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(Cs/56727) J-1

# புலம்பெயர் தொழிலாளர் சங்கம்
# யாழ்.மாவட்டத்தில் உருவாக்கம்!

**யாழ்ப்பாணம், நவ.22**

**யாழ்.மாவட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர் சங்க மொன்றை உருவாக்குதல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலகக் கேட் போர் கூடத்தில் இடம்பெற்றது.**

குறித்த கலந்துரையாடலில் யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் கருத்துத் தெரிவிக்கையில் - ஏற்கனவே கிராம ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட 70 புலம்பெயர் தொழிலா ளர் சங்கங்கள் காணப்படுகின்றன. அதன் வெளிப்பாடாக மாவட்ட மட்டத் தில் புலம்பெயர் தொழிலாளர் சங்கம் உருவாக்கப்படவுள்ளது. தாயகத்திலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்வோரின் எண்ணிக்கை அதிகமா கக் காணப்படும் நிலையில் உத்தியோ கபூர்வமாக அடையாளப்படுத்தல் குறைவாகவே உள்ளது. சரியானமுறை யில் அடை யாளப்படுத்தி நலன்சார் விடயங்களைச் செயற்படுத்துவதற்கு இந்தச் சங்கம் செயலாற்றும். இந்தச் சங்கத்தில் பிரதேச செயலக உத்தியோ கத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர் - என்றார். (ச-33,66,9)





மாவீரர் வாரத்தின் முதல் நாளான நேற்று விசுவமடு மாவீரர் துயி லுமில்லத்தில் நினை வேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. ஏராள மான பொதுமக்கள் கொட்டும் மழையிலும் பங்கேற்று பொதுச்சுடர் ஏற்றி மாவீரர்களை நினைந்து அஞ்சலி செலுத்தினர். (ச-113)

# புடினின் அன்பளிப்பு

வடகொரியாவுடனான உறவு களைப் பலப்படுத்தும் வகை யில், வடகொரியாவுக்கு 2 சிங்கங்கள் உட்பட 70க்கும் மேற்பட்ட விலங்குகளை ரஷ்ய அதிபர் புடின் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

அண்மையில் ரஷ்யாவில் உள்ள அரியவகை குதிரை களை புடின் அன்பளிப்பாக வழங்கியிருந்தார். இதைத் தொடர்ந்தே தற்போது மேலும் சில விலங்குகள் வழங்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

மேற்பார்வையாளர் தேவை
கொழும்பு கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள கட்டட நிறுவனமொன்றிற்கு அனுபவமுள்ள மேற்பார்வையாளர் தேவை.
077 760 0444
(CS/1903) J-1

# பெரியபுராண படன நிறைவு

யாழ்ப்பாணம், நவ.22

சுதுமலை இந்துசமய விருத்திச் சங்கம் நடத்தும் பெரியபுராணபடன நிறைவு விழா சுதுமலை விசா லாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமான் ஆலய மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள் ளது.

யாழ். பல்கலைக்கழகம் ஆங்கிலமொழிக் கற்பித் தல் துறை பேராசிரியர் கலாநிதி கந்தையா ஸ்ரீக ணேசன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ் வில் பிரதம விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலைப் பீடாதிபதி கலாநிதி சு.பரமானந்தம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ. சு. நவநீதகிருஷ்ணசர்மா, விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி அகல்யா ஜனார்த்தனன், சண்டி லிப்பாய் பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யசித்திரா சிவதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.